



பத்மஸ்ரீ டாக்டர் பா. சிவந்தி ஆதித்தனார் அவர்களின் 88வது பிறந்தநாளை முன்னிட்டு தூத்துக்குடி வ.உ.சி சந்தை அருகே அவரது திருவுருவப் படத்திற்கு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சரும் தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளருமான திருமதி. கீதாஜீவன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் மாநகர திமுக செயலாளர் ஆனந்தசேகரன், துணை மேயர் திருமதி. ஜெனிட்டா செல்வராஜ், பகுதிச் செயலாளர் சுரேஷ் குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் கோட்டு ராஜா, திருமதி. கஸ்தூரி தங்கம், மாவட்ட பிரதிநிதிகள் செல்வகுமார், நாராயணன், வட்டச் செயலாளர்கள் செல்வராஜ், சதீஷ், மாமன்ற உறுப்பினர் திருமதி. ஜெயசீலி, தொ.மு.ச. நிர்வாகி மரியதாஸ், மாவட்ட மருத்துவரணி தலைவர் அருண்குமார், மாநகர இளைஞரணி அமைப்பாளர் அருண் சுந்தர், மாநகர மாணவரணி துணை அமைப்பாளர் திருமதி. சத்யா உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.




## சென்னை, கிண்டியிலுள்ள

# கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனைக்கு தங்கத் தரச் சான்றிதழ்!

### அமைச்சர் எ.வ. வேலுவிடம் இந்திய பசுமைக் கட்டட கவுன்சில் தலைவர் வழங்கினார்!

சென்னை, செப்.25-

முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை கட்டுவதற்கான அறிவிப்பினை, முதலமைச்சர் அவர்கள் 03.06.2021 அன்று வெளியிட்டார். இக்கட்டடம், பொதுப்பணித்துறையால் 6,03,409 சதுர அடி பரப்பளவில் ரூ.240.54 கோடி மதிப்பீட்டில், மருத்துவமனை கட்டடமானது 15 மாதங்களில் கட்டி முடிக்கப்பட்டு, முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவின் முதற்கட்டமாக 15.06.2023 அன்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் பொது மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டது.

இக்கட்டட பணியானது முதலமைச்சர் அவர்களின் தொடர் கண்காணிப்பு மற்றும் பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் மற்றும் மருத்துவம்மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, திட்டமிடபட்டதற்கு 4 மாதங்களுக்கு முன்பே முடிக்கப்பட்டு, கட்டட துறையில் சிறந்த மைல்கல்லாய் அமைந்துள்ளது. இம்மருத்துவமனை தொடங்கப்பட்ட ஓர் ஆண்டுக்குள் லட்சக்கணக்கான நோயாளிகள் குணமடைந்ததற்கான சிறப்பான மருத்துவ பணிகளை செய்து தற்பொது தமிழ்நாடு அரசு மருத்துவமனைகளில் சிறப்பிடம் பெற்றுள்ளது.

இம்மருத்துவமனையில் தங்கி பயன்பெறும் நோயாளர்கள் உடல் ரீதியாகவும், உளவியல் ரீதியாகவும் தன்னியல்பாக குணமடைய உயிரியக்க வடிவமைப்பு கருத்தியல் (Biophilic Design) அடிப்படையிலும் மற்றும் பசுமைக் கட்டடமாகவும் கீழ்கண்ட வசதிகளுடன் வடிவமைக்கப்பட்டு பசுமைத் தரத்சான்றிதழ் பெறும் வண்ணம் இந்திய பசுமை கட்டட கவுன்சிலில் 20.03.2023 அன்று பதிவு செய்யப்பட்டது.

**உலகத்தரத்தில் வடிவமைக்கப்பட்டது!**

இம்மருத்துவமனை கட்டடம் பசுமைக் கட்டடமாக கட்டுமானத்தின் போது, சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வண்ணம் பசுமைத் தரச்சான்றிதழ் பெற்ற கட்டுமான பொருட்கள், மறுசுழற்சி செய்யப்பட்ட கட்டுமான பொருட்கள், நீர் சிக்கனத்தினை மேம்படுத்தும் வண்ணம் குழாய்கள் மற்றும் மறுசுழற்சி செய்யபட்ட நீரினை பயன்படுத்தும் வண்ணம் வடிவமைக்கப்பட்டுள்ளது. மின் சேமிப்பினை கூட்டும் வண்ணம் மின் உபகரணங்கள், திடக்கழிவு மேலாண்மை (Vermicompost), மக்கள் இயற்கையோடு ஒன்றிணையும் வண்ணம் கட்டடத்தினுள் பூஞ்செடிகளுடன்கூடிய தாழ்வாரங்கள், வெளிப்புறங்களில் பச்சை புல்வெளிகளும், செயற்கை நீரூற்றுகளும் மற்றும் நோய் தன்மைக்கேற்ப மருத்துவ நிபுணர்களால் அங்கீகரிக்கப்பட்ட சுவர் வண்ணங்கள் பூசப்பட்டும், பெரிய சாளரங்களும், முற்றங்களும் கொண்டு உலக தரத்தில் இக்கட்டடம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இம்மருத்துவமனையில் உற்பத்தியாகும் அனைத்து வகையான கழிவுகளையும் சுத்திகரிக்கும் வண்ணம் 500 KLD வசதியுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் (STP) மற்றும் 30 KLD வசதியுள்ள மருத்துவ திரவக் கழிவுகள் சுத்திகரிப்பு நிலையம் (ETP) அமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு மருத்துவமனைகளில் பசுமைக் கட்டடமாக வடிவமைக்கப்பட்டு பொதுப்பணித்துறையால் உருவாக்கப்பட்ட முதல் கட்டடம் இதுவே ஆகும். இம்மருத்துவமனை கட்டடத்திற்கு இந்திய பசுமை கட்டட கவுன்சிலானது (IGBC - Healthcare Projects) தங்கம் தரச்சான்று வழங்கியுள்ளது.

இச்சான்றிதழ் மற்றும் பதக்கத்தினை அஜித் குமார் ஜோர்டியா, தலைவர் இந்திய பசுமை கட்டட கவுன்சில் - சென்னை பிரிவு அவர்கள் பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் எ.வ. வேலு அவர்களிடம் 24.09.2024 அன்று வழங்கினார்.

இந்நிகழ்வின்போது, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலர் திருமதி. சுப்ரியா சாஹு, பொதுப்பணித்துறை முதன்மை தலைமை பொறியாளர் கே.பி.சத்தியமூர்த்தி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

# வி.சி.க. நிர்வாகியின் பேச்சு அரசியல் ரீதியில் பக்குவமில்லாதது!

### ரவிக்குமார் எம்.பி. கண்டனம்



சென்னை, செப்.25-

தி.மு.க. கூட்டணி குறித்த வி.சி.க நிர்வாகியின் கருத்துக்கு விடுதலைச் சிறுத்தை கள் கட்சியின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவிக்குமார் கண்டனம் தெரிவித்துள்ளார்.

தி.மு.க. கூட்டணி குறித்து, வி.சி.க. நிர்வாகி பேசியது உண்மைக்கு மாறானது என்றும், அரசியல் ரீதியில் பக்குவமில்லாத பேச்சு என்றும் ரவிக்குமார் எம்.பி. கண்டனம் தெரிவித்துள்ளார். தேர்தல்களில், கூட்டல் கழித்தல் கணக்குக்கு மாறாக கொள்கை அடிப்படையிலேயே தி.மு.க. கூட்டணி வெற்றி பெற்றது என்றும் தமிழ்நாடு, புதுச் சேரியின் 40 மக்களவைத் தொகுதிகளிலும் இந்தியா கூட்டணி வெற்றி பெற தி.மு.க. முக்கிய காரணம் என்றும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி பொதுச் செயலாளர் ரவிக்குமார் எம்.பி. தெரிவித்துள்ளார்.

## வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்ததாக குற்றச்சாட்டு!

# அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் வைத்திலிங்கம் மீது வழக்குப்பதிவு!

### லஞ்ச ஒழிப்பு காவல்துறையினர் நடவடிக்கை!

சென்னை, செப்.25-

வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்ததாக கூறி அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் வைத்திலிங்கம் மீது லஞ்ச ஒழிப்புத்துறையினர் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

2011 முதல் 2016ஆம் ஆண்டு வரையிலான அ.தி.மு.க. ஆட்சியின்போது, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சராக இருந்த வைத்திலிங்கம், சென்னை பெருங்களத்தூரில் 57 புள்ளி 94 ஏக்கர் நிலத்தில் ஆயிரத்து 453 வீடுகள் கொண்ட அடுக்குமாடி குடியிருப்புகளை கட்ட திட்ட அனுமதி கோரி விண்ணப்பித்த தனியார் நிறுவனத்திடம் 27 கோடியே 90 லட்சம் ரூபாய் லஞ்சம் பெற்றதாக புகார் எழுந்தது.

**விரைவில் விசாரணை தொடக்கம்!**

இதுகுறித்து அளிக்கப்பட்ட புகாரின் பேரில், ஊழல் தடுப்புப் பிரிவினர் விசாரணை நடத்தினர். இதில், குற்றச்சாட்டில், உண்மை இருப்பது உறுதி செய்யப்பட்டது.

இதையடுத்து வைத்திலிங்கம் மீது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு சார்பில் வழக்குப்பதிவு செய்யப்பட்டது. இதுதொடர்பாக அவரிடம் ஊழல் தடுப்புப் பிரிவினர் விரைவில் விசாரணை நடத்த உள்ளனர்.

இந்நிலையில், வருமானத்துக்கு அதிகமாக 32 கோடியே 47 லட்சம் ரூபாய் அளவுக்கு கூடுதல் சொத்து சேர்த்ததாக கூறி வைத்திலிங்கம் மீது லஞ்ச ஒழிப்புத் துறையினர் தற்போது வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

**அமைச்சர் பதவியை தவறாக பயன்படுத்தினார்!**

தனது அமைச்சர் பதவியை தவறுதலாக பயன்படுத்தி வருமானத்தை விட 1,057 சதவீதம் கூடுதலாக சொத்து சேர்த்துள்ளதாக வழக்கில் குற்றம்சாட்டப் பட்டுள்ளது.

வைத்திலிங்கத்தின் மகன் பிரபு உள்ளிட்டோர் மீதும் சொத்துக்குவிப்பு வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

## அரசமைப்புச் சட்டத்திற்கு முரணான கருத்துகளைப் பேசி வரும்

# தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவியை பதவி நீக்கம் செய்ய வேண்டும்!

### காங்கிரஸ் கட்சி வலியுறுத்தல்!

புதுடெல்லி, செப்.25-

ஆளுநர் ஆர்.என். ரவி கூறி வரும் கருத்துக்கள் தொடர்ந்து சர்ச்சையை ஏற்படுத்தி வருகின்றன. இதற்கிடையே இந்திய அரசியலமைப்பில் பிரதானமான மதச்சார்பின்மை, ஐரோப்பாவில் இருந்து இறக்குமதியானது என்றும் இதனால் இந்தியாவிற்கு மதச்சார்பின்மை தேவையற்றது என ஆளுநர் ஆர்.என்.ரவி அண்மையில் பேசியிருந்தது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில் ஆளுநரின் இந்த கருத்திற்கு காங்கிரஸ் கட்சியின் பொதுச்செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள சமூக வலைதளப்பதிவில், அரசமைப்புச் சட்டத்தின் பெயரால் பதவியேற்றுக்கொண்டு, தொடர்ந்து அரசமைப்புச் சட்டத்திற்கு முரணாக ஆளுநர் ஆர்.என்.ரவி கருத்து தெரிவிப்பது அரசமைப்புச் சட்டத்தை அவமதிக்கும் செயல் என அவர் சாடியுள்ளார்.

ஆளுநரின் இந்த நடவடிக்கை ஏற்றுக் கொள்ளமுடியாதது என்றும் இதனால் அரசமைப்புச் சட்டத்திற்கு விரோதமாக செயல்படும் அவரை ஆளுநர் பதவியிலிருந்து ஒன்றிய அரசு நீக்கம் செய்ய வேண்டும் என அவர் வலியுறுத்தி உள்ளார். பிரதமர் மோடி எதனைச் செய்ய விரும்புகிறாரோ அதனையே ஆளுநர் ஆர்.என்.ரவி பிரதிபலித்து வருவதாக ஜெய்ராம் ரமேஷ் சாடியுள்ளார்.




உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதியில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்ட பணிகள் குறித்து, மாவட்ட மற்றும் வட்டார நிலை அலுவலர்களுடன் ஒட்டன்சத்திரம் காமாட்சி திருமண மண்டபத்தில் நேற்று (24.09.2024) ஆய்வு மேற்கொண்டார். அருகில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மொ.நா.பூங்கொடி, மாவட்ட வருவாய் அலுவலர் சே.ஹா.சேக்முகையதீன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி பெ.திலகவதி, பழனி வருவாய் கோட்டாட்சியர் கிசான்குமார், மாவட்ட வன அலுவலர் ராஜ்குமார், தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கம் திட்ட இயக்குநர் சதீஸ்குமார், ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்கள் திருமதி மு. அய்யம்மாள், திருமதி சத்தியபுவனா ராஜேந்திரன், மாவட்ட ஊராட்சிக் குழு துணைத்தலைவர் கா.பொன்ராஜ், ஒட்டன்சத்திரம் நகராட்சித் துணைத் தலைவர் ப.வெள்ளைச்சாமி, கூட்டுறவு சங்கங்கள் இணைப்பதிவாளர் கோ.காந்திநாதன், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மேலாண்மை இயக்குனர் திருமதி சுபாஷினி உட்பட பலர் உள்ளனர்.

## வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் குறித்து

# மாவட்ட, மாநகரச் செயலாளர்/பொறுப்பாளர் மற்றும் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள் கவனத்திற்கு...

## தலைமைக் கழக அறிவிப்பு!

1-1-2025 தேதியை தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு தமிழகத்திலுள்ள வாக்காளர் பட்டியல்கள் திருத்தம் செய்திட வரைவு வாக்காளர் பட்டியலைத் தேர்தல் ஆணையம் 29.10.2024 அன்று வெளியிட உள்ளது.

29.10.2024 முதல் 28.11.2024 வரை புதிய வாக்காளர்களைச் சேர்க்கவும் மற்றும் பெயர்கள் நீக்கவும் - திருத்தம் செய்யவும் மனுச் செய்ய கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது.

இதுதவிர, **தமிழ்நாடு மாநில தலைமை தேர்தல் அதிகாரி அவர்களால் அறிவிக்கப்பட்டு**, **வார இறுதி நாட்களான சனி மற்றும் ஞாயிறு நிர்ணயிக்கப்பட்ட மையங்களில் சிறப்பு முகாம்கள்** நடத்தப்படவுள்ளன.

மேற்குறிப்பிட்ட நாட்களில் விடுபட்ட வாக்காளர்களும், இடம் மாறிய வாக்காளர்களும், 1.1.2025 அன்று 18 வயது நிரம்பக்கூடிய புதிய வாக்காளர்களும் தங்கள் பெயர்களை சேர்க்க, நீக்க, திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களை பெற்று, பூர்த்தி செய்து, அந்தப் படிவங்களை அந்தந்த முகாம்களில் கொடுக்க வேண்டும்.

இதனடிப்படையில் 2025ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் தேதி 18 வயது நிறைந்தவர்களின் பெயர்களையும் -வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம் பெறாத பெயர்களையும்- புதிதாக குடிபெயர்ந்து உள்ள வாக்காளர்களின் -பெயர்களையும், புதிய வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும்; தொகுதியிலிருந்து இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்போதுள்ள பட்டியலில் இருந்து நீக்கவும், தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

| | | |
|---|---|---|
| 1. | வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் | 29.10.2024 |
| 2. | பெயர்களைச் சேர்க்க/ நீக்க / திருத்தம் செய்வதற்கு மனு கொடுக்க கால அவகாசம் | 29.10.2024 முதல் 28.11.2024 வரை |
| 3. | சிறப்பு முகாம் நடத்தப்படும் நாட்கள் | தலைமை தேர்தல் அதிகாரி அறிவிக்கும் சனி, ஞாயிறு நாட்கள் |
| 4. | இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் நாள் | 06.01.2025 |

தேர்தல் ஆணையம் அறிவித்துள்ள மேற்கண்ட அட்டவணையின்படி, சிறப்பு முகாம்கள் நடைபெறவிருக்கும் நாட்களில், மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், ஊர்க்கிளை, வார்டு கழக செயலாளர் - நிர்வாகிகள் மற்றும் வாக்குச் சாவடி நிலைய முகவர்கள் (BLA-2) ஆகியோர் தங்களை முழுமையாக ஈடுபடுத்திட கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மாவட்ட, மாநகரக் கழகச் செயலாளர்கள்/ பொறுப்பாளர்கள் மற்றும் தலைமைக் கழகத்தால் நியமிக்கப்பட்ட சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள் சிறப்பு அக்கறையோடு கழக அமைப்புகளை இப்பணியில் ஈடுபடுத்திடக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இந்தப் பணி குறித்து கழக நிர்வாகிகள் மேற்கொண்ட நடவடிக்கைகளை தலைமைக் கழகத்துக்கு அவ்வப்போது கடிதம் மூலம் தெரிவிக்க வேண்டுகிறோம்.

**'அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018.
நாள்: 24-9-2024.

**தலைமைக் கழகம்,**
**தி.மு.க.**